# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர்சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 09.11.2020**

**முன்னிலை**

**திரு ரா.ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA10886/A/2019**

| | | |
|---|---|---|
| திரு. C. செல்வரத்தினம், | .. | மேல்முறையீட்டாளர் |
| /எதிர் | | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,<br>(தலைமையிடம்),<br>மாவட்ட காவல் அலுவலகம்,<br>புதுக்கோட்டை. | .. | பொது அதிகார அமைப்பு |

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 25.07.2019 தேதியிட்டு அனுப்பிய மனுவில், கீரனூர் காவல் நிலையத்திற்குட்பட்ட களமாவூர் கிராமத்தில் 01.10.2010 முதல் 31.12.2018 ஆண்டு வரையிலான காலங்களில் கற்பழிப்பு குற்றங்கள் மற்றும் மரண சம்பவம் ஏற்பட்டு அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தால் அதன் நகல்களை வழங்குமாறு கேட்டு விண்ணபித்துள்ளார். பொதுத்தகவல் அலுவலரடமிருந்து தகவல் ஏதும் கிடைக்கப்பெறததால் மனுதாரர் 19(1)-ன் கீழ் 07.09.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அவற்றிற்கு மேல்முறையீட்டு அலுவலர் 20.09.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். திருப்தியடையாத மனுதாரர் 30.10.2019 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால் ஏற்கனவே 07.10.2020-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதற்கு கடைசி வாய்ப்பாக

19.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, அவர் ஆணையத்திற்கு 29.10.2020-க்குள் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க பொதுத்தகவல் அலுவலர் ந.க.எண்.424/த.அ.உ.ச/புதுகை/2020, நாள் - 20.10.2020, என்ற கடிதத்தின் வாயிலாக மனுதாரரின் கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்கி அதற்குச் சான்றாக அவற்றின் நகல்களை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரும் தனது கோரிக்கைகளுக்கு அனைத்து தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களால் தான் மனநிறைவு அடைவதாகவும் ஆணையத்திற்கு தெரிவித்தார். **ஆகவே இவ்வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA10886/A/2019</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்), மாவட்ட காவல்
அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு. C. செல்வரத்தினம்,
P.S. Consumer Protection Association,
எண்.4/431, முத்தமிழ் தெரு,
மணிமேடு, 83 தண்டலம்,
சென்னை - 600 128.

*.TG/PC_09/11/2020*